அடையாள இலக்கம்

H ☐ ☐ ☐ ☐ ☐ ☐

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2017

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

## அடிப்படை எழுத்தறிவுப் போட்டி

# அதிமேற் பிரிவு

(12 – 14 வயதுப் பிரிவு)

நேரம்: 2 மணித்தியாலங்கள்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாகப் 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

| மொத்தப் புள்ளிகள் | |
|---|---|

**(அ) கீழே தரப்பட்ட சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து வசனத்தைப் பூர்த்தி செய்க.**

1) நேற்றுப் புகையிரதம் தாமதமானதால் நீங்கள் பாடசாலைக்குப் பிந்திச் ______________________ .

அ) சென்றீர்கள் ஆ) செல்லுவீர்கள்

இ) செல்லுவோம் ஈ) செல்லவேண்டும்

2) தமிழ்ப் பாடசாலைக் ______________________ பிரதம விருந்தினர் உரை நிகழ்த்தினார்.

அ) களைவிழாவில் ஆ) கலைவிழாவில்

இ) கழைவிழாவில் ஈ) மழைவிழாவில்

3) மணமகன் மணப்பெண்ணின் கழுத்தில் ______________________ கட்டினான்.

அ) தாலி ஆ) தாளி

இ) வேலி ஈ) தாயம்

4) என் ______________________ எடுத்தது யார்?

அ) புத்தகத்தில் ஆ) புத்தகத்தை

இ) புத்தகங்களில் ஈ) புத்தகத்துள்

5) நியூசவுத்வேல்ஸ் ______________________ பாராளுமன்றம் சிட்னியில் உள்ளது.

அ) மானிலத்தின் ஆ) மாநிலத்தின்

இ) கண்டத்தின் ஈ) குடாநாட்டின்

(5 புள்ளிகள்)

**(ஆ) முதல் வாக்கியத்தில் கொடுக்கப்பட்டுள்ள கோடிட்ட வினைச்சொல்லைஅதன் கீழுள்ள வாக்கியத்தின் காலத்திற்கு ஏற்றவாறு மாற்றி தரப்பட்ட இடைவெளிக்குள் எழுதுக.**

1) நான் நேற்று அப்பாவுடன் **விளையாடினேன்.**

நாளை நான் தம்பியுடன் ________________________________.

2) என் தங்கை சென்ற ஆண்டு பாடசாலை பேச்சுப் போட்டியில் **பங்குபற்றினாள்.**

என் தங்கை வருகிற ஆண்டும் பாடசாலை பேச்சுப் போட்டியில்

____________________.

3) நாளைக்கு மழை பெய்தால் எமது ஊரில் உள்ள குளங்கள் **நிரம்பும்**.

நேற்று மழை பெய்ததால் எமது ஊரில் உள்ள குளங்கள்

_________________________.

4) இந்த வருடம் நான் நான்காம் வகுப்பிற் தமிழ் **படிக்கிறேன்**.

அடுத்த வருடம் நான் ஐந்தாம் வகுப்பிற் கணிதம் ____________________.

5) இன்று பாடசாலைக்கு மாணவர்கள் எல்லோரும் **வந்தார்கள்.**

நாளைக்கும் பாடசாலைக்கு மாணவர்கள் எல்லோரும்

________________________________.

(10 புள்ளிகள்)

**(இ) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | பூ | + | சோலை | = | ______________________ |
| (2) | தீமை | + | சொல் | = | ______________________ |
| (3) | மரம் | + | வேர் | = | ______________________ |
| (4) | பால் | + | குடம் | = | ______________________ |
| (5) | வெண்மை | + | தாமரை | = | ______________________ |

(10 புள்ளிகள்)

## (ஈ) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

(1) சோறுண்டான் = ________________ + ________________

(2) சங்கொலி = ________________ + ________________

(3) அடுத்தடுத்து = ________________ + ________________

(4) வானொலி = ________________ + ________________

(5) வடகிழக்கு = ________________ + ________________

10 புள்ளிகள்) [ ]

## (உ) கோடிட்ட இடத்தில் பொருத்தமான சொல்லை எழுதி வசனத்தைப் பூர்த்தி செய்க.

(1) திரு மல்கம் ரேன்புள் அவர்கள் அவுஸ்திரேலியா நாட்டின் ________________________ ஆவார் .

(2) ஆடு, மாடு, புலி, சிங்கம் என்பனவற்றை ____________________ என அழைப்பர்.

(3) பலனை எதிர்பாராமற் சேவை செய்பவர்களை நாம் ____________________ என அழைப்போம்.

(4) எனது மாமா தினமும் ____________________ சென்று வழிபாடு செய்வார்.

(5) வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகியன நான்கு ______________ ஆகும்.

(6) அவுஸ்திரேலியாவின் தேசியக்கொடியில் ஆறு ________________________ உள்ளன.

(7) வாகனத்தை வேகமாக ________________________ அது மரத்தில் மோதியது.

(8) வானவில்லிலே ____________________ நிறங்கள் காணப்படும்.

(9) எமது வீட்டை எப்போதும் ______________________ வைத்திருக்க வேண்டும்

(10) மாம்பழம், ____________________ , வாழைப்பழம் ஆகியவற்றை முக்கனிகள் என அழைப்போம்.

(20 புள்ளிகள்)

**(ஊ) எதிர்ப் பொருள் தரும் சொல்லை எழுதுக.**

(1) உயர்வு - ________________

(2) வானம் - ________________

(3) மெல்லிய - ________________

(4) கறுப்பு - ________________

(5) பிறப்பு - ________________

(5 புள்ளிகள்)

**(எ) ஒத்த கருத்துள்ள சொல்லை எழுதுக.**

1) தாய் - ________________

2) சந்திரன் - ________________


3) மிருகம் - ________________

4) சோறு - ________________

5) அரவம் - ________________

(5 புள்ளிகள்)

**(ஏ) கீழே தரப்பட்ட படத்தொடரைக் கவனமாகப் பார்த்து கருத்தை விளங்கிக் கொள்க. கீழே கொடுக்கப்பட்ட சொற்களைப் பயன்படுத்தி கதை விளங்கும்படியாகக் குறைந்தது ஐந்து (5) வசனங்கள் எழுதவும்.**




| | | |
|---|---|---|
| பிள்ளைகள் | தட்டுகள் | தந்தை |
| தாயார் | பள்ளிக்கூடம் | நடந்ததைக் கூறினார் |
| ஓய்வு | உணவு | பாராட்டினார் |
| உதவி | பாடம் | தலைவலி |
| சமையலறை | வேலை | |

**1.** ______________________________________________

______________________________________________

______________________________________________

**2.** ______________________________________________

______________________________________________

______________________________________________

**3.** ______________________________________________

______________________________________________

______________________________________________

**4.** ______________________________________________

______________________________________________

______________________________________________

**5.** ______________________________________________

______________________________________________

______________________________________________

(15 புள்ளிகள்

**(ஐ) பின்வரும் ஒருமைச் சொற்களைப் பன்மைச் சொற்களாக்குக.**

**உதாரணம்: பறவை – <u>பறவைகள்</u>**

1) மாணவன் - ____________________

2) பட்டம் - ____________________

3) கல் - ____________________

4) குதிரை - ____________________

5) பூச்சரம் - ____________________

(10 புள்ளிகள்)

**(ஒ) கீழே தரப்பட்ட தொழில் செய்பவர்களுக்குரிய தொழிற் பெயர்களை கோடிட்டு இணைக்கவும்.**

| | | |
|---|---|---|
| 1) | வாகனம் ஓட்டுபவர் | மாலுமி |
| 2) | மரவேலை செய்பவர் | வைத்தியர் |
| 3) | கப்பல் ஓட்டுபவர் செலுத்துபவர் | நூலகர் |
| 4) | நூல் நிலையத்தை நிர்வகிப்பவர் | தச்சர் |
| 5) | நோயாளிகளைப் பரிசோதிப்பவர் | சாரதி |

(5 புள்ளிகள்)

**(ஓ) கீழே தரப்பட்டவற்றில் மிகவும் பொருத்தமானவற்றைக் கோடிட்டு இணைக்கவும்.**

| | | |
|---|---|---|
| 1) | நாடகம் | போர் |
| 2) | விளையாட்டு | கருமுகில் |
| 3) | மகாபாரதம் | மைதானம் |
| 4) | படிப்பு | பட்டம் |
| 5) | மழை | அரங்கம் |

(5 புள்ளிகள்)